# அல்-ஹுதா

AL-HUTHA الهدى

மலர்: 3. இதழ்- 3. 4 - நவ- ஜன. பெ,ஏப் 1986/87


# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய உத்வேகத்துடன் எழுந்துவருகிறது.....!

**அரச நிலங்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்காக சிறுபான்மையினரின் பாதுகாப்பை உடைக்கப் பார்க்கிறர்கள், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவான முக்கிய காரணியே குடியேற்றப் பிரச்சினைதான்...!**

● சந்திப்பு: ஆர். எம். நௌஸாத்

குறுகிய காலத்துள் பலரது கருத்தையும், கவனத்தையும் ஈர்த்துக்கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஜனுப் எம். எச். எம். அஷ்ரஃப் சட்டத்தரணி அவர்களை நாம் சந்தித்த சமயம் அப்போதுதான் ஒரு கருத்தரங்கில் கலந்துவிட்டுத் திரும்பியிருந்தார். முன்னைய காலப்பகுதிகளில் தீவிரமாக அரசியல் நோக்கும், வேகமான நடவடிக்கைகளும் கொண்டிருந்த அஷ்ரஃப் தற்போது இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்தவராக ஆழ்ந்த ஞானப்போக்கும் உறுதியானதும், சரியானதுமான முடிவுகளை செயற்படுத்தும் ஒரு தலைவராகத் தென்படுகிறர். மிகுந்த வேலைப்பளுவின் காரணமாகச் சேர்வுற்றிருந்த போதிலும், புன்முறுவலோடு "கேள்விகளுக்கு பதில் சொல்லவே இப்போது எனக்கு நேரம் சரியாகிவிடுகிறது." என்று கூறியவர் - அப்போதே அஸர் தொழுகையையும் முடித்துக்கொண்டு பேட்டிக்குத் தயாரானர்.

● கே:' குர்ஆன், ஹதீஸ். ஆகியவற்றை காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளாக கொண்ட நீங்கள் இஸ்லாத்தின் அடிப்படைகளான இஜ்மாஃ. கியாஸ்- என்பனவற்றை விட்டுவிட்டீர்களா?

★ ப: இஜ்மாஃ,கியாஸ்; என்பனவற்றை நாம் விட்டுவிடவில்லை. அவையிரண்டும் குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றை மூலமாகக் கொண்டு பெறப்படுபவையாகும். ஆதலால் குர்ஆன் ஹதீஸ் எனும்போது இஜ்மாஃ, கியாஸ் உள்ளடங்கிவிடும், ஆதலால்தான் காங்கிரஸின் அடிப்படைகளாகக் குர்ஆன் ஹதீஸ் எனக்கொண்டோம்.

● கே:- வடகிழக்கு நிலங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்கள் என்பதை உறுதிசெய்து அவற்றுக்காக காரியமாற்றதிடசங்கற்பம் கொள்ளும் உங்கள் கொள்கையில்; வடகிழக்குக்கு அப்பால் உள்ள சில நிலங்கள் (உதாரணமாக பேருவளை) முஸ்லிம் மக்களின் பாரம்பரிய நிலமே என்பது பற்றி ஏதும் கூறப்படவில்லையே ..?

★ ப; ஏன் வடகிழக்கை மட்டும் விசேடமாக எடுத்துக்கொள்ளுகின்றேம் என்றுல், இப்பிரதேசங்களில்தான் சிங்கள குடியேற்றங்கள் கொணரப் படுகின்றன. தமிழ் பேசும் மக்கள் பேரினவாதப் போக்குகளை அனுபவிக்காத நிலையில், இப் பிரதேசங்களில் அமைதியாக வாழ்ந்திருந்தனர் எனவேதான் வடகிழக்கு மாநிலங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்கிறேம், வடகிழக்குத் தவிர்ந்த பிரதேசங்களில் நீங்கள் குறிப்பிட்டதுபோல பேருவளையில் குடியேற்றப் பிரச்சினை கிடையாது. முஸ்லிம் காங்கிரஸ் உருவானதன் முக்கிய காரணியே இக் குடியேற்றப் பிரச்சினைதான். அரச நிலங்கள் தரிசாகக்கிடக்கும் இடங்களில்தான் குடியேற்றப் பிரச்சினை தோன்றுகிறது. இவ்வாறு தரிசு நிலங்கள் வடகிழக்கில்தான் அதிகமாகக் கிடக்கின்றன எனவே, இந்த அரசுநிலங்களை முறையாகப்பயன்படுத்த வேண்டும் என்ற கேட்பாட்டைவைத்துக்கொண்டு அதன் பேரின் சிறுபான்மை இனத்தின் பாதுகாப்பை உடைக்கப்பார்க்கிறர்கள். எனவேதான் வடகிழக்கை கோடிட்டுக் காட்டியிருக்கிறேம். வேருவலை, கொழும்பு, புத்தளம் ஆகியன MIXED POPULATION ஆக அதாவது பலவின மக்களின் குடியிருப்புக்களாக உள்ளன எனவே MIXED POPULATION இல்லாத இடங்கள்தான் அந்தந்த இனங்களின் பாரம்பரிய நிலமாகக்கொள்ளமுடியும்! அத்துடன் வடகிழக்குக்கு அப்பாலுள்ள முஸ்லிம்கள் காணிப்பிரச்சினை என்றுல் ஒன்றும் தெரியாதவர்களாகவே இருக்கிறர்கள் எனவேதான் வடகிழக்கை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

● கே:- இலங்கையில் இதுவரை ஆரம்பிக்கப்பட்ட சகல முஸ்லிம் கட்சி / இயக்கங்களும் சிங்களப் பேரினவாத அலையில் அடிபட்டு அல்லது அள்ளுப்பட்டுப் போன நிலையில் மன விரக்தியடைந்துள்ள முஸ்லிம்களுக்கு உங்கள் காங்கிரஸ் அளிக்கும் உத்தரவாதம் என்ன...?

★ ப: இதில் முக்கியமாக குறிப்பிடக்கூடிய சில விசயங்கள் உள்ளன. முதலாவது முஸ்லிம் கட்சி ஒன்று கல்முனையில் 1957ல் உருவானது. -' இஸ்லாமிய ஐக்கிய முன்னணி " என்ற பெயரில் ஜனுப் எம், எஸ் ஹமீட் இதை உருவாக்கினர் பின்னர் ஜனுப் M. S, காரியப்பர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்பட்டது. ஜனுப் ஹமீது செயலாளராக இருந்தார். முஸ்லிம் லீக்கூட பதிவு செய்யப்பட்ட கட்சியாகும். கட்டுப்பணச் சலுகைக்காக இது பதியப்பட்டது இ. ஐ- முன்னணிக்கு உதய சூரியன் சின்னம் கிடைத்தது. இவற்றைத் தவிர முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் அரசியல் இயக்கமாக செயற்பட்டது, 77ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஈடுபட்டகட்சி இது. மூன்ருவதாக வந்துள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்நான்கு கட்சிகளிலும் முஸ்லிம் லீக் இப்போது இருந்தாலும்கூட அதன் அரசியல் அங்கீகாரத்தை இழந்துவிட்ட நிலையில் இருக்கிறது. அவ்வாறு மு. லீக் ஏன் அரசியல் அங்கீகாரம் பெற்றது என்பது விந்தைக்குரியது ஏனெனில் இது ஒருபோதுமே தேர்தலில் குதிக்கவில்லை. இ- ஐ. முன்னணி பதிவு செய்யப்பட்டபோதும் மு. லீக்கட்சிக்கு ஒரு சின்னம்கூட வழங்கப்படவில்லை... இதிலிருந்து நாம் கூறக்கூடியது என்னவென்றுல், ஐ. தே. கட்சியிலிருந்து முஸ்லிம்கள் ஓடிவிடக்கூடாதுஎன்பதற்காக ஒரு கவர்ச்சியை (முஸ்லிம் கட்சி என்று) ஏற்படுத்தினர்.

(6ம் பக்கம் பார்க்க)

" உண்மையின் உதயம் உயர்ச்சியின் வித்து " அன்பளிப்பு ரூபா. 2. 50

இப்பத்திரிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதும் ஆக்கியோரே பொறுப்பாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் அகத்திலிருந்து

# முஸ்லிம்களும் தனிக்கட்சியும் !

நமக்கென்று ஓர் அரசியல் கட்சியின் அவசியத்தைத் தெட்டத் தெளிவாக எம்மில் பலர் உணர்ந்துகொண்டோம் இதனுல் நமக்கொரு கட்சிவேண்டும் என் ப தி ல் ஒருமித்து விட்டோம். இந்த எழுச்சி நல்லதொரு எதிர்காலத்தை நமக்குத் தரும் என் ற நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் ஓர் எதிர்பார்ப்பு இந்த எதிர்பார்ப்பு நமக்கு ஆரோக்கியமானதாக அமைவதென்ருல், நம்மிடையே பல கட்சிகள் உதயமாகாதிருக்க வேண்டும்.

நம்மிடையே பல கட்சிகள் தோன்றுமாயின் நாம் பல பாகமாகப் பிரிந்து விடுவோம். அப்போது எம்மிடையே கூட்டுமொத்தமான பலமிராது, ஒன்று திரட்டப்பட்ட வாக்குப் பலமிராது, குறித்த விஷயங்களில் ஒருமித்த கருத்துக்களும்; அதற்காகப் போராடும் திறமையுமிராது. நமக்குத் தேவையான அபிலாசைகளை நிறைவு செய்துகொள்ள முடியாத பேதமையையும் ஏட்டிக்குப் போட்டியான நிலையும் ஏற்படும். இப்படிப் பல பிளவுகளும் பிரச்சினைகளும் நம்மை வரவேற்கும். இந்த நிலையில் நாம் எந்த பயன் பாட்டையும் சரியானதாகப் பெறமாட்டோமென்பது நிச்சயமானது.

கட்சிகள் தோற்றம் பெறுமாயின் "நமக்கென்று கட்சிகளிருக்கின்றன" எனப்பெருமைதான் பேசமுடியுமேயல்லாது வேறெந்த ஆக்கபூர்வமான தாக்கங்களையும் நாம் ஏற்படுத்திவிடமுடியாது. அதேநேரம் நாம் எதற்காக "கட்சி" வேண்டும் என்று ஒருமித்தோமோ அந்த இலக்கைத் தப்பவிட்டதாகவே முடியும். அதனுல் மீண்டும் நாம் நாளையே எதிர்பார்ப்பதுடன்; அரசனை நம்பி புருசனை கைவிட்ட "நிலைக்கு இட்டுச் செல்லப்படுவோம்.

ஆகவே நமக்கென்று ஒரேயொரு கட்சிதான் இருக்க வேண்டும், அப்போதுதான் நாம் கட்சியை ஏற்படுத்தியதன் இலக்கை அடைய முடியும். அதே நேரம் நாமொரு முக்கியமான ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது. அதாவது நமக்கென்று நாம் ஏற்படுத்தும் கட்சியின் மூலம் நாம் முழுமையாகப் பயன்பெற வேண்டுமானுல். நமது வாக்குப் பலம் பிரிந்து விடாது "நமது கட்சி" க்குத்தான் என் ற ஒன்று படுதலும், உறுதியுமிருக்கவேண்டும்.

"நமக்கென்று" தோன்றும் கட்சியிலுள்ளவர்களின் தனிப்பட்ட நடவடிக்கைகளையும். அவர்கள் மீதுள்ள தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களையும் அளவு கோலாகக் கொண்டுமதிப்பீடாது கட்சியின் கொள்கையையும் அதன் செயற்பாட்டையும் கொண்டுதான் அளக்க வேண்டும். நமது சமூகத்தை "அடகு" வைக்கும் நிலைப்பாடு காணப்படுமாயின் அதற்கான காரணிகளை அடையாளங்கண்டு அகற்றுதல், திருத்துதல் போன்ற அம்சங்களை கையாளுதல்வேண்டுமேயல்லாது கட்சியை முடக்கிவிடத் துணிவது ஆரேக்கியமான சூழ்நிலைக்கு "வேட்டு" வைப்பதாகவே அமையும்.

● பிரதம ஆசிரியர்

# காணமல் போகும் விலாசங்கள்

● என். ஏ. தீரன்

எழுதப்பட்ட
மானுடத் தபால்கள்
ஒவ்வொன்றும்
வீர காவியங்களாக...............

என்னதான்
விடுதலை முத்திரையுடன்
இடப்பட்டாலும்
ஒவ்வொன்றிலும்
பயங்கரவாத சீல் குத்தி
முகாமுக்குள்தான்
தபாலிடப்படுகின்றன.

விலாசம் மாறிப் போன
மானுடத் தபால்களை
மீட்கும் பணியில்
அன்னையர்
கண்ணீர் மனு எழுதி
காலனுக்குச் சமர்ப்பிக்க
எந்தத் தபாலும் இதுவரை
உயிர் விலாசத்துடன்
விநியோகிக்கப்படவில்லை.

சாதாரணத் தபாலைக் கூட
4ம் மாடிப் பதிவுத் தபால்களாக்கும்
இந்த யுகம்............

இஸ்ராயீல்த் தபால்காரனுக்கோ
"பை" கொள்ளாத சந்தோஷம்

உலக விலாசம் எழுதப்பட்ட
மானுடத் தபால்களைத்
திருடித் திருடி.........
எத்தனை தபால்கள்தான்
விலாசம் மாறிப் போய் விட்ட......ன

-: ★ :-

## கவனத்திற்கு

அல்-ஹுதா பிரதி தேவையானோர் ரூபா 3/- அன்பளிப்பாக அனுப்பிப் பெற்றுக்கொள்க. தபால்கட்டளைகள் / காசுக்கட்டளைகள் அனுப்பும்போது பெறுபவரின் பெயருக்குநேரே A. M. M. NAZEER எனவும் பணம் பெறும் தபாற் கந்தோராக Post Office Sainthamaruthu என எழுதவும். உங்கள் எல்லாத் தொடர்புகளுக்கும்

*THE EDITOR*
AL - HUTHA
*129, Osman Road*
*SAINTHAMARUTHU, 01*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் இன்றையத் தேவை

● எம். எஸ். பீர்முகம்மதுதம்பி (பி. ஏ)

இலங்கை அரசியலில் அந்நிய ஆதிக்கத்தின் விளைவாக கடன் வாங்கிப் பெற்றுக் கொண்ட சிலபாரம்பரியங்கள் அரசியல் போக்கினை திசை திருப்பி விட்டமையினால் இலங்கையில் அரசியல் வளர்ச்சி ஏற்படுவது தடைபடுத்தப் பட்டதாகி விட்டது. சிங்களப் பெரும்பான்மை சமூகத்தையும், தமிழர் என்ற சிறுபான்மைச் சமூகத்தையும் முஸ்லிம்களென்ற இன்னொரு சிறுபான்மைச் சமூகத்தை(யும் வேறு பலவின மக்களை)யும் உள்ளடக்கிய இலங்கையில் முதலிரு சமூகமும் மொழி ரீதியில் பகுக்கப்பட்டு நிற்க. முஸ்லிம் சமூகமாத்திரம் மதரீதியில் தனித்து நிற்கிறதென்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு மொழியோ இனமோமுக்கியமல்ல என்பதையும்; அவர்களின் சமயம்தான் முக்கியமென்பதையும் இத்தனித்துவம் வலியுறுத்துகின்றது.

இலங்கை முஸ்லிம்கள் இத்தனித்துவத் தன்மையை எந்தளவிற்கு உணர்ந்துள்ளார்கள் என்பது வினாவாகவே அமைந்துள்ளது ஆனால், இலங்கைமக்களால் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமானவர்களென்று கணிக்கப்படுவது பாராட்டப்படத் தக்கதே இலங்கையரின் தனித்துவத்தை அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியில் அந்நிய ஆட்சியாளர்கள் மாத்திரமன்றி இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ் சமூகத்தினர்களும் சிதறவைத்துள்ளார்கள் என்பதை முஸ்லிம் சமூகம் உணரத்தவறிவிட்டது.

இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் பலபாகங்களிலும் சிதறி வாழ்ந்த போதிலும் அவர்களின் அரசியல் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன ஆயினும் (முஸ்லிம்களின் ஈமான் விலகி விடுமளவில்) சமய உரிமைகள் புறக்கணிக்கப்படாத காரணத்தினால் அவர்கள் அரசியல் உரிமைகள் பற்றி இதுவரை காலமும் சிந்திக்கத்தவறி விட்டனரென லாம். தமது அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முனைகின்றபோது ஏற்படும் சில தடைகளைத் தவிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை கையாள்வதன் மூலம் தமது தேவைகளை நிறைவுசெய்து கொண்டமையினால் அரசியலில் குறைவாக ஆர்வம் காட்டி வந்துள்ளனர் இலங்கையில் அரசியல் வளர்ச்சியில் 1833ம் ஆண்டு நடைமுறைக்குவந்த "கோல்புறூக்" யாப்பிலும், 1931ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த "டொனமூர்" அரசியல் யாப்பிலும் 1947ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த "சோல்பரி" யாப்பிலும் இனவாரி பிரதிநிதித்துவமுறமையும் இடம்பெற்றிருந்தமையினால் தமது அபிலாசைகளை ஓரளவு நிறைவு செய்து கொள்ள வாய்ப்பிருந்தது. ஆனால் 1972ம் ஆண்டு யாப்பு நடைமுறைக்கு வந்தபின்னர் முஸ்லிம்களுக்கான அளிப்பீடுகள் அதிகரிக்கப் பட்டமையினால் அரசியலில் ஒரு நெருக்கடியான நிலையை எதிர் நோக்க வேண்டியதாயிற்று. இந்த நெருக்கடியின் எதிர் உந்துதலாக இன்று முஸ்லிம்கள் கட்சியென்றும், இயக்கமென்றும், தனித்துவமென்றும், உரிமைகள் என்றும், எதிர் காலத்தில் எங்களது நிலமை என்ன வென்றும் தமக்குள் தாமே வினாவெழுப்பத் தொடங்கியுள்ளனர். அன்மைக்காலங்களில் பல வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் முஸ்லிம்களின் நிலமைபற்றி பல் வேறு அபிப்பிராயங்களையும் வெளியிட்டுச் சில இலக்குகளைக் காட்டமுயன்று வந்துள்ளன இம் முயற்சி வெற்றி பெருவதற்கு முஸ்லிம் சமூகம் சில முன்னோடி நடவடிக்கைகளை பல்வேறு கோணங்களில் மேற்கொண்டு வந்துள்ளது - வருகின்றது இலங்கை வரலாற்றில், இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும் போது இவ்வாறான நடவடிக்கைகளில் சிலர் தீவிரமாகவும் பலர் மந்தமாகவும் ஈடுபடுவது வழமை "மழைகாலத்தில் குடை தேடுவது போல" மூலை முடுக்குகளைத் தட்டி பழைய குடைகளை புதுப்பிப்பதும், சிலர்புதிய குடைகள் வாங்குவது போல சில நடவடிக்கைகள் மேற்கொண்டு பின்னர் கைவிடுவதுமுண்டு இந்தப் போக்கு இலங்கை முஸ்லிம்களுக்கு மாத்திரம் உரித்தானபண்பல்ல. இலங்கைகட்சிகளின் வரலாற்றில் கூட காணப்பட்டு வந்த உண்மையாகும் பலகட்சிகள் ஒன்று சேர்வது, சில தேவைகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியமைத்த பின்னர் அவைபிரிந்து சென்ற சம்பவங்கள் இலங்கை வரலாற்றில் பரக்கக்காணலாம். உதாரணமாக திரு. S. W. R. D. பண்டார நாயக்கா அரசாங்கமும், 1960ம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோபண்டார நாயக்கா அமைத்த அரசாங்கமும், அதனைப் போல் திரு செல்வா, டட்லி சேனநாயக்கா அமைத்த அரசாங்கமும் இவ்வாறான போக்குகளைக் கொண்டுள்ளன.

இலங்கை முஸ்லிம்களின் சந்தர்ப்ப வாத போக்கிற்கு காரணம் அவர்களுக்கு உருவாக்கப்பட்டதலைமைகள் பேரின வாதிகளால் உருவாக்கப்பட்டவை இலங்கை முஸ்லிம்களின் முன்வைக்கப்பட்டகருத்துக்கள் பேரின வாதிகளால் திணிக்கப்பட்டவை அதே போல் தொழிற்பாடுகளும் பேரின வாதிகளை அடியொட்டிச் செல்வதாக அமைந்துள்ளன. ஆகவே மழைக்காளான்கள் போல் நிலையற்ற தலைமை, நிலையற்ற கட்சித்தன்மை, திடமற்ற அரசியல் போக்கு, தமது தனித்துவத்தை சிந்தித்துப் பார்க்க முடியாமை ஆகிய வற்றுக்கு இலங்கை முஸ்லிம்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். இதனை வேறு விதமாகச் சொன்னால், பல் வேறு பிரிவுகளாக இலங்கை முஸ்லிம்கள் பிரித்து விடப்பட்டுள்ளார்கள் பிரித்தாளும் வல்லமையை அந்நிய ஆட்சியாளர்கள் இலங்கையில் பயன் படுத்திவந்தமையை எம் சமூகம் உணரவில்லை. அதேவழிமுறையை பேரினவாதிகள் கையாள்வதை இன்னும் முஸ்லிம்கள் உணராதிருப்பது வேதனைக் குரியது.

முஸ்லிம் சமூகத்திற்கு இன்று வரையும் கொடுக்கப்பட்டதலைமைகள் அல்லது தலைவர்கள் என்று கூறிக் கொண்டவர்கள் பேரினவாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவோ, அல்லது பேரினவாதிகளின் அடிவருடிகளாகவோ இருந்தார்கள் இருக்கிறார்கள் என்பதை முஸ்லிம் சமூகம் சிந்திக்க வேண்டும். இலங்கை முஸ்லிம்கள் தமக்கென தாங்களாக இதுவரை ஒருதலை வரைத்தெரிவு செய்து கொள்ள வில்லை பேரின வாதிகளோ, அல்லது முதலாவது சிறுபான்மையானரராலோ இலக்காகக்காட்டப்பட்டவர்களையே தலைவர்களாக கொண்டு தொழிற்பட்டு ஏமாற்றமடைந்துள்ளோம். முஸ்லிம் சமூகம் காலம் தாழ்த்தாது ஒருமையுணர்வோடு அரசியல் வேறு, சமயம் வேறு, என்று சிந்திக்காது, வீரம், விவேகம், திறமை மிக்க தலைவரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் தலைமை இல்லாமல் தொழிற்படுவது இஸ்லாத்தில் வரவேற்க்கத்தக்கதல்ல.

இலங்கை முஸ்லிம்கள் திட்டமான தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் பேரின வாதிகளினால் முன்வைக்கப்படும் கருத்துக்களுக்கு தங்கள் அபிப்பிராயங்களை தெரிவிப்பவர்களாக இருந்து வந்துள்ளார்கள், தவிர தாமாகவே எந்தக் கருத்துக்களையும் முன்வைப்பவர்களாக இருக்கவில்லை அதற்குக் காரணம் முஸ்லிம்களுக்குத் தலைமை வகித்துவந்தவர்கள் பேரின வாதிகளின் தயவிலே தங்கிவாழ்ந்ததினால் தாமாகவே கருத்துக்கள் கூற சக்தியற்றவர்களாக இருந்து வந்தமைமேயாகும் பேரினவாதிகளினால் வைக்கப்படும் கருத்துக்களுக்கு அபிப்பிராயம் தெரிவிக்க அவர்களால் நியமிக்கப்பட்ட அடிவருடிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதகமாகக் கூறுவார்களா? அவர்கள் சமூகநலனில் அக்கறை கொள்ளக்கூடியவர்களாக இருக்கத் தேவையில்லை அப்படி இருக்கவும் முடியாது அன்மைக்கால நிகழ்வுகள் இக்கருத்தினை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன. வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா? அவ்வாறு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களின் நிலையென்ன? முஸ்லிம்களுக்கு மாகாணம் வழங்குவது அம்பாறை தவிர்ந்தவட கிழக்கு இணைப்பு, தனித்தனியான முஸ்லிம் உதவி அரசாங்க அதிபர்பிரிவுகள் அவற்றினை இணைத்து ஒரு மாகாண ஆட்சி முஸ்லிம்களுக்காக பிரதிநிதித்துவப்படுத்த சில அடிவருடித் தலைவர்கள் போன்ற

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் "மத்ஹபு"களின் பங்களிப்பு !

● எம். எம். எம். மிஹ்லார்

மத்ஹபுகள் என்று நம்மத்தியில் பலவுள்ளன. அவற்றில் சரியானவை என்று "சுன்னத்வல் ஜமாஅத்" கொள்கை அங்கீகரித்தவை மாலிகி, ஹன்பலி, ஹனபீ, ஷாபிஈ என்பனவாகும். மத்ஹபுகள் மனிதர்களுக்கு நேர் வழியை இலகுவாகக் காட்டும் கருவி போலிருக்கின்றன. இப்பாதை காட்டுதலென்பது பலருக்கு வேண்டிய தொன்ருகும். ஒரு மத்ஹபைச் சார்ந்தோர்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பேதமையை உருவாக்குவதல்ல இதன் இலட்சியம். மாருக மனித குலத்தினை ஈருலக வாழ்விலும் ஈடேற்றம் பெறச் செய்வதே இலக்கு இது எம்மிற் பலருக்குப் புரியாத விஷயமாக இருப்பது வியப்பிற்கும், நகைப்பிற்கு முரியதாகும்.

அங்கீகரிக்கப்பட்ட நான்குமத்ஹபுகளிடையே முரண்பாடுகளோ, அடிப்படை கருத்து வேறுபாடுகளோ கிடையாது மாருக (செயல்களின்) சட்டங்களில்தான் சில வித்தியாசங்களிருக்கின்றன. இவைகள் கூட நமது நன்மை கருதி ஏற்பட்டதாகும். சட்டங்கள் என்று வரும் பட்சத்தில் சில விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தேயாகு மென்னும் அடிப்படை உண்மையை நாம் மறுத்தோ, மறந்தோ விட முடியாது இமாம்களிடையே சட்டங்களில் வித்தியாசங்கள் ஏற்பட்டதிற்கு முக்கிய காரணிகளுள் ஸஹாபாக்களின் வாழ்க்கை முறைமையும் அடங்கும் இது வொருபுறமிருக்க; "சட்டங்களில் மாறுபட்ட கருத்திற்கு வழிவகுத்தவர்கள் இமாம்கள்தான்" என்று கூறுவதில் சற்றும் உண்மை இல்லை உத்தம நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே சற்று மாறுபட்ட கருத்துக்கள் சட்டங்களில் இருந்து வந்துள்ளன. சட்டத்துறையில் கருத்து வேறு பாடுகளிருப்பவை இயல்பானவை; தவிர்க்க முடியாதவை என்றே கூறவேண்டியுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணங்களாக பின் வருபவைகளை நாம் குறிப்பிடலாம்.

சட்டங்களை வகுக்கக் கூடிய குர் ஆன் வசனங்கள் ஹதீஸ்கள் ஆகியவற்றில் பெரும் பாலனவை பலகருத்துகள் எடுக்கக் கூடியனவாக இருப்பதுடன்; அறிவுத்தரங்களும், விளங்கும் ஆற்றலும் வித்தியாசமாகவுள்ளன. இமாம்கள் ஒரு சட்டத்தை வகுப்பதென்பது வெறும் சிந்தனையில் மாத்திரமல்ல. மாருக தங்கள் ஆய்விற்கு மூலாதாரங்களாக குர் ஆன், ஹதீஸ். நேர்வழி பெற்றஸஹாபாக்களின் நடைமுறைகளையும் கொண்டுதான். ஆகவே, அடிப்படைகளிலே வேறுபாடுகள் தோன்றுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும் போது, கருத்து வேறுபாடுகளிருக்கக் கூடாது என்று குரல் கொடுப்பது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியமாகும் - பொருத்தமாகுமென்பதையும் நாம் எண்ணிப் பார்க்காதிருக்க முடியாது. சட்டத்துறையைப் பொறுத்தவரை இந்த வேறுபாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை என்பதற்கும் ஒழிக்க முடியாதவை என்பதற்குமான ஆதாரங்களில் சில, தைப் பார்ப்போம்.

இமாம் புகாரீ, இப்னு உமர் அறிவிப்பதாகப் பின்வருமாறு ரிவாயத்துச் செய்கிருர்கள் "நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகழியுத்த நாளன்று பின்வருமாறு சொன்ஞர்கள். "பனூகுறைழாக்களின் பூமியிலே அஸரை அனைவரும் தொழ வேண்டும், (என்று) பாதையிலே அஸருக்கான நேரம் வந்ததும் அவர்களில் சிலர் நாம் அங்கு போய்த்தான் தொழ வேண்டு மென்றனர். வேறு சிலர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தக் கருத்தில் கூறவில்லை என்று கூறிப்பாதையிலே அஸரைத் தொழுது கொண்டனர். இது இகபர இறஸூல் (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்ட போது அவர்கள் யாரையும் கண்டிக்க வில்லை.

(ஆதாரம் : பத்ஹுல் பாரீ)

அபூஸயீத் அல்குத்ரி அறிவிக்கிருர்கள் "இருஸஹாபாக்கள் பிரயாணம் செய்தனர். பிரயாணத்தின் போது தொழுகையின் நேரமாகியது. ஆனுல் வுளு செய்வதற்கான நீர் அவர்களுக்கு கிடைக்க வில்லை எனவே இருவரும் சுத்தமான மண்ணுல் "தயமம்" செய்து தொழுதனர். பின்னர் அத்தொழுகைக் குரிய நேரத்திலே இருவருக்கும் நீர் கிடைத்தது. அவர்களில் ஒருவர் மீண்டும் வுளுச் செய்து தொழுகையை மீட்டித் தொழுதார். ஆனுல் மற்றவர் மீட்டித் தொழ வில்லை இதனை நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் வந்து கூறினர் அப்போது நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகையை மீட்டித் தொழாதவரைப் பார்த்து நீர் ஸுன்ஞவின்படியே நடந்து கொண்டீர். உமது தொழுகை நிறைவேறி விட்டது. என்ருர்கள் தொழுகையை மீட்டித்தொழுத மற்றவரைப் பார்த்து உமக்கு இரண்டு முறை கூலியுண்டு, என்று கூறிஞர்கள்

(ஆதாரம் ; அபூதாவூத் நஸாஈ)

இப்படியான ஹதீஸ்கள் பலவுள்ளன இதுபோல் பல கருத்துக்கள் தரக் கூடிய திருவசனங்கள் சட்டங்களைப் பொருத்திருக்கின்றன. இவ்வாருன அமைப்பு முறைமை நம்மத்தியிலிருப்பது நமக்குப் பல நன்மைகள் தரவல்லதாகும் ஏனெனில், "அல்லாஹ் எல்லாச் சட்டங்களுக்கும் திட்டமான கருத்துக்களைக் கொடுக்கும் வசனங்களை இறக்கிவைக்க வில்லை. மாருக பல கருத்திற்கும் இடம் பாடான வசனங்களையே இறக்கியுள்ளான். சட்டங்களைப் பின்பற்றும் மக்களுக்கு இதனுல் வசதிகள் பல உருவாகு மென்பதே இதன் இலக்கு ~~திட்டவட்டமான கருத்தைக் கொடுக்கும் வசனங்~~களை இறக்கி ஒரேமத்ஹபுகளி (ல்வழியி) ல் மக்கள் அனைவரும் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென அல்லாஹ் விரும்ப வில்லை" என்பதனை இது காட்டுகிறது. (ஆதாரம் : தஸ்ஹுலல் உஸூல் - அல் மஹல்லாவி)

"தக்லீது,. பின் தொடர்தலென்பது இஸ்லாத்திற்கு முரண்பாடான ஒரு விஷயம் என்ற கருத்துச் சிலரிடையே காணப்படுகின்றது இக்கருத்துச் சரியான தென்று கொள்ள முடியாது ஏனெனில், "பின் தொடர்தல்" என்பதில் அங்கீகரிக்கப்பட்டதென்றும், அங்கீகரிக்கப்படாதவை என்றும் இருபகுதிகள் உண்டு. ஆயினும் இங்கு அங்கீகரிக்கப்பட்ட மத்ஹபுகளுடைய இமாம்களை பின் தொடர்தல் கூடுமா? இல்லையா என்று பார்ப்பதுதான் பிரதானம். ஆகவே இமாம்களைப்பின் தொடர்தல் அங்கீகரிக்கப்பட்டதுதான் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் இஸ்லாத்தின் மூலாதாரங்களிலுள்ளன.

குர்ஆன், ஹதீஸ், ஆகிய இரண்டையும் நன்குணர்ந்து கொள்ளும் தகுதியும் ஆற்றலுமுள்ளவர்கள் இமாம்களைப் பின்தொடரவேண்டிய நிலையிருக்காது இதற்காகப் பலருக்குத் தேவையாக இருக்கும் ஒன்றை மறுப்பது அறிவுபூர்வமான - நியாயமான நடவடிக்கையாக இராதென்பது தெளிவானது. நல்ல விஷயங்களில் அறியாதவர்கள் அறிந்தவர்களைப் பின் பற்றுவதை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. அதே நேரம் இமாம்களைப் பின்தொடர வேண்டிய சூழ்நிலையும் நம்மத்தியிலிருந்தேயாகும் இதனைப்பின்வரும் இறைவசனம் துலம்பரமாக எடுத்துக் காட்டுகிறது. "வயுஅல்லிமுஹுமுல் கிதாபவல்ஹிக்மத்த - அவர்களுக்கு குர்ஆனையும், தத்துவார்த்தங்களையும் கற்றுக்கொடுக்க நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பினேம்" இவ்வசனம் இறைமறையையும் - அதில்

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதம் ஒரு "ரஸ்திரவாதி"

● "மைந்தன்"

சிறுகதை

இரவின் கடைசி நிஸப்தத்தையும் விரட்டிக்கொண்டு சுபஹூத்தொழுகையின் அதான் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. பாதி தூக்கமும், பாதி விழிப்புமாய் இருந்த ஆதம்பாவா நித்திரைப்பாயை சுருட்டிவைத்து விட்டு எழுந்து கொண்டார் நாற்பத்தியேழு வருடங்களுக்கு வயதை விற்றிருந்த ஆதம் உழைப்புக்கு வாழ்வை செலவழித்ததால் உருவம் கூடிய வயதுக்கு கணக்குப் போட்டது,

'' பாத்து .... பாத்து ...'' தன் மனைவி பாத்தும்மாவை நித்திரையிலிருந்து அரட்டினார் சோம்பலையும். கொட்டாவியையும் உதறியவளாக எழுந்த பாத்தும்மா என்ன பாங்கு பரிஞ்சுட்டா என்று அன்றைய நாளின் முதல்வார்த்தைக்கு திறப்புவிழா நடத்தினாள். 'ஓம் பரிச்சுட்டு... பள்ளிக்கு போயிட்டு வாரன் சோத்தக் கட்டிவை நேத்தும் வயலுக்குப் போகல சனியன் பிடிச்ச மழையாலஎன நாலைந்து தீக்குச்சிகளை கொண்றுவிட்டு தன் இலக்கை அடைந்தவராக பள்ளிவாசலை நோக்கி கால்களை ஊறவிட்டார்.

"என்ன நேத்து வயலுக்குப் போணியா...'' ஆதம் தன் பக்கத்து வயலைச்செய்யும் காசிமிடம் வினவை விற்றார். 'ஓம் காக்கா ஒரே மழைபேஞ்சிட்டு இருக்கு குடலைப்பருவம் எல்லாத்துக்கும் அல்லாஹ்தான் இருக்கான்... இண்டைக்கு வயலுக்கு வாரானே...... பதிலோடு கேள்வியை பிணைத்த காசிமுக்கு... கொஞ்சம் சுணங்கித்தான் வருவேன் போடியார்டே போற வேலையும் இருக்கு என்றார் ஆதம் சுபஹூத் தொழுகை முடிந்து பள்ளிவாயல் வாசலடியில் சம்பா[illegible]க்கும் பலரில் இவர்கள் இருவரும்பிரிந்து கொண்டனர்,

இவ்வளவு நாளும் ஒற்றுமைக்கோஷம் எழுப்பிக் கொண்டிருந்த மேகங்கள் இன்று பிரிவினை பேசி நின்றதைக் கண்ட ஆதம் மனதிற்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

மனைவி கொடுத்த தேனிரைப்பருகியபடி வாசலில் அமர்ந்திருந்தார் ஆதம், ஒரு தொகை பீடிக்குறைகளையும் தீக்குச்சிகளையும் வெளியே கொண்டிய பரீதா "வாப்பா கொட்டவுடையானது பீடிபத்தினத்தில இல்ல நெருப்பெட்டி வாங்கினத்தால்தான்...'' மகளின் நகைச் சுவையை ரஸித்த ஆதம் 'எங்க நாஸரக் காணல்ல ..' என்று கண்கள் தேடின அவன் இன்னும் எழும்பல என்றபடி கிணற்றடிக்குச் சென்றாள் பரீதா.

-' இந்தவருடம் எப்படியாவது மகளுக்கு திருமணம் முடித்துவைத்துவிடவேனும் பரீதாவின்பருவம் ஆதத்திற்கு விளக்கம் சொல்லிக் கொடுத்தது

ஆதத்துக்கும், பாத்தம்மாவுக்கு இறைவன் கொடுத்தபிள்ளைச் செல்வங்கள் இரண்டுதான்' மூத்தவள் பரீதா பள்ளிக்கு பாதியில் ஸலாம் சொல்லிவிட்டாள் இரண்டாவது நாஸர் உயர்தரம்எழுதிவிட்டு றிஸல்டுட்காக அடைகாத்து நிற்கிறான் ஆதத்தின் வருமானமும் இவர்களுக்கு போதுமானதாக இருந்தது.

சூரியன் எட்டிப்பார்த்தான் ஒரு பீடியைஅசிங்கப்படுத்தியவராகசோத்த எடு... மனைவிக்கு கட்டளை இட்டார் ஆதம் என்னன்டாலும் சரி மாலமஃரி போட வீட்டுக்கு வரப்பாருங்க காலங்கெட்டுக்கெடக்குமுன்னன்டா...... ஒரு பெருமூச்சோடு கவலை கலந்த வார்த்தைகளோடும் ; சோற்றுப் பார்சலையும் சமர்ப்பித்தாள் பாத்தும்மா இண்டைக்குவர கொஞ்சம் சுணங்குந்தான்...... ஆதம் முடிக்கவில்லை என்ன இருந்தாலும் நாளைக்கு செஞ்சிக்கலாம் நேரத்தட வரப்பாருங்க தற்காலத்தில் கொண்டுள்ள பயத்தினால் எழுந்த பரீதாவின் கோரிக்கை இவைகள் ஒவ்வொரு வீட்டிலும் ஒலிக்கும் தேசிய கீதங்களாகிவிட்டதே இப்போது 'சரி நான் வாறன்' என்றபடி வைஸிக்கிளைத் தள்ளிக் கொண்டு வெளியேறும் போது நாஸர் கண்களைக் கசக்கிக் கொண்டு நிற்பது ஆதத்திற்கும் தெரிந்தது.

அடிவாணம் தீப்பிடித்திருந்தது நாள் தன் கதை முடியப் போகிறது என்பதை நினைத்து இருள் சோகத்தில் மூழ்கத் தொடங்கியது. தன் வீட்டுக்கும் வயலுக்கும் உள்ள ஆறுமைல் வித்தியாசத்தில் நான்கு மைல்களை கடந்து விட்டார் ஆதம் இடையில் இருந்த தமிழ் கிராமத்தை கெதியாகக் கடக்க வேண்டும் என்ற எண்ணத்தில். வாயில் குடியிருந்த பீடிக்கு 'தலாக்' சொல்லிவிட்டு களைத்த கால்களுக்கு சக்தியைக் கொடுத்தார். பைசிக்கள் சன்று வேகம் பெற்றது. மெயின்வீதி சனத்தை இழந்திருந்தது சமகால சம்பவங்களால் பெயர் பெற்ற அந்த கிராமத்தை நிலைக்கும் போது ஆதத்தின் மனதில் பயம் குடியேறியது,

பின்னல் சில வாகனங்களின் இரைச்சல் கேட்டது இந்த உலகத்தில் ஆதம் கடைசியாகக் கேட்ட சத்தமும் அதுதான்

ஆதத்தின் வீட்டை உறவுகளும் அழுகையும்ஆக்கிரமித்துக்கொண்டன ஆதத்தின் மையத்தை எடுப்பதற்காக எத்தனையோ கைகளுக்கும் கால்களுக்கும் மரியாதை கொடுக்க வேண்டியிருந்தது, நாஸரின் கையொழுத்துக்கு ஆதத்தின் மையத்து கையளிக்கப்பட்டது.

கலண்டர் ஒரு நாள் ஆடையை கழற்றியிருந்தது உம்மா 'இத்தா' வலைக்குள் அகப்பட்டது ராத்தா கண்ணீரோடு பேச்சு வார்த்தை நடத்துவது அந்த குடும்பத்தின் வாழ்க்கைக்கு உழைப்புக்கமாக்களை போட்டுவந்த ஆதம், மரணம் என்ற முற்றுப்புள்ளியால் குடும்ப வசனத்தை முடித்துக் கொண்டது தங்களதுபிற்கால நிலைமை அனைத்தும் சேர்த்து நாஸரை வேதனைச் சிலை போர்த்திக் கொண்டிருந்த வேளை - பக்கத்து வீட்டு ரொனியோச் செய்தியில். ஆதத்தின் மரணத்தைப் பற்றி வந்த சொற்கள் நாஸரின் இதயத்தில் தீத் துளிகளாக இறக்கிக் கொண்டிருந்தன. ●

---

இன்ஷா அல்லாஹ்

## அடுத்த இதழிலிருந்து...

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்காக இஸ்லாமிய நாகரிகம் வினு விடைகளை வெளியிடவுள்ளோம்உங்களின் எதிர்பார்ப்புக்களை எமக்கு முன் கூட்டிய எத்திவைப்பீர்களாயின் முடிந்த வரை உங்கள் அபிலாசைகளை நிறைவு செய்வோம்.

ஆசிரியர்:- ஐனுப் எம். எஸ்.
பீர்முஹம்மது தம்பி பி. ஏ.
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்.

---

நைன்டின் எயிட்டிசெவன்...

நீண்டு கிடக்கும்
இருட்டைத்
துப்பரவாகக
கைகளில்
தீபங்களை ஏற்றுவோம்-
வேதனைகள்
வேடிக்கைகள் ஆனதால்
காலங்களும்
கர்த்தரித்து உதிர்கின்றன
இனிமேலும்......

● எஸ் யூ. கமர்ஜான்பீபீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா முஸ்லிம்..........

(1ம் பக்கத் தொடர்)

எனவேதான் மு, லீக் ஐ, தே, கட்சியினுல் விழுங்கி ஜீரணிக்கப்பட்டபின் வெளியேவந்து விடிந்த விளம்பரமாக இருக்கிறது. முஸ்லிம்கள் ஐ, தே கட்சியிலிருந்து ஓடிவிடாமல் இருப்பதற்காக உபயோகிக்கப்படும் ஒரு மந்திரக்கோல்தான் மு. லீக் தேவைக்காக உண்டாக்கி தேவை முடிந்ததும் சுருட்டி வைத்து விடுகின்றனர். அடுத்து மு. ஐ முன்னணி 1976களில் ஆரம்பிக்கப்பட்டது. அதனை ஆரம்பித்தவர்களுள் நானும் ஒருவன், மு, ஐ; முன்னணிக்கு ஏற்பட்ட ஒரு பெரிய சவால் என்னவென்ருல் உடனடியாகவே அதுவொரு பொதுத் தேர்தலைச் சந்திக்கவேண்டிவந்தது. இது ஒரு துரதிர்ஷ்டமான ஒரு நிகழ்வாகும். இது ஆரப்பிக்கப்பட்டு செயல்பட்ட காலகட்டம் இக்கட்சி முஸ்லிம்களுக்கு சேவை செய்ய ஆரம்பிக்கப்பட்டதா அல்லது அதன் அபேட்சகர்கள் பாராளுமன்றம் செல்ல உபயோகித்த ஒரு வழியா என்பதை சரியாகத் தீர்மானம் செய்ய தடையாய் இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் அதில் நான் ஒருபேச்சாளனுகவே இருந்தேன். இது தோன்றிய வேகமும், த, வி, கூட்டணியோடு இணைந்த தீவிரமும் விட்டுப்பிரிந்த துரிதமும், மறுபடி ஸ்ரீ ல, சு. கட்சியோடு இணைந்தவேகமும் எதைக் காட்டுகிறதென்ருல், பாராளுமன்றம்செல்லலைவிரைவுபடுத்தத்தான் ஆனுலும் மு. லீக்கை உருவாக்கி ஐ. தே. கட்சி வைத்திருந்தது, போல மு. ஐ. முன்னணியைத் த வி,கூ. உருவாக்கவில்லை. இது தன்னிச்சையாகவே உருவானதால் பேரினவாத அலையில் அடிபட்டுப்போகவில்லை. மாருக பாராளுமன்ற ஆசனங்களை மட்டும் சிந்தித்தவர்களால்தான் (நீங்கள் சுயநல வாதிகள் என்று குறிப்பிடுகிறீர்கள்) அடிபட்டுப்போனது. மு. ஐ, முன்னணி ஸ்ரீ. ல, சு கட்சியொடு கூட்டுச்சேர்வதை நானும் எதிர்க்கவில்லைதான் எனினும் அத்தீர்மானத்தை எடுத்து ஸ்ரீ. ல. சு. க. மேலிடத்தைச் சந்திக்கப் போனவர்கள் அங்கேயே சங்கமமாகிவிட்டது பெரிய ஆச்சரியம் சந்திப்பின் முடிவுகூடத் தெரியப்படுத்த ஒரு கூட்டம் கூடாமலேயே போய் விட்டது. நான் அன்று மு. ஐ. முன்னணியில் பேச்சாளனுக இருந்தபோதும் எந்த ஒரு தனிப்பட்ட நபருக்கும் வாக்களிக்கப் பிரசாரம் செய்யவில்லை. மு, ஐ: முன்னணிக்கே வாக்களிக்கும்படிதான் உரையாற்றினேன் என்று திடமாகக் கூறுவேன்.

● கே: எதிர்காலத்தில் காங்கிரஸ் தேர்தலில் ஜெயித்து இன்ஷா அல்லாஹ் சில அபேட்சகர்கள் பாராளுமன்றம் செல்லும் போது கட்சித் தாவல்கள் ஏற்படாது என உறுதி கூறமுடியுமா.....? அவ்வாறு ஏற்படும் கட்சித்தாவல்களையிட்டு காங்கிரஸின் சட்டதிட்டம் என்ன?

★ ப; அவ்வாருன ஒரு சந்தர்ப்பத்தில் கட்சிமாறுபவர்கள் கட்சியை மாற்றிக்கொண்டு போகலாமேதவிரகாங்கிரஸ்மாருது அத்தகையோருக்குஎதிரான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்காக ஒரு சபைகூட உள்ளது. இன்றைய அரசியலமைப்பின்படி தனிநபர் அரசியல் சுதந்திரத்துக்கு அவ்வளவு இடமில்லை. கட்சிக்கே முக்கியத்துவம் அத்தோடு. மக்களிடம் இப்போதெல்லாம் வாக்கு ஆயுதங்கள் மாத்திரமன்று வேறு ஆயுதங்களும் நடமாடுகின்றன... அபேட்சகர்கள் இதனை உணர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்அல்லவா?

● கே: தற்போது கிழக்கு முஸ்லிம் இளைஞர்களிடையே முகிழ்த்து வருவதாகக் கூறப்படும் முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் பற்றி அறிவீர்களா? அவை பற்றி காங்கிரஸ் என்ன கருகிறது?

★ ப; இந்த முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் பற்றி காதில் விழுந்தசேதிகளாகத்தான்தெரியும் உஸாமாவின் சேனை ஜெய்ஜுல் இஸ்லாம், ஜிஹாத், அல்பத்தாஹ் என்று சிலபெயர்களையும் கேள்விப்பட்டுள்ளேன். இவைகளிடம் ஏராளமான ஆயுதங்கள் உள்ளதாயும் கூறப்படுகிறது. ஆயுதங்களை தரிப்பதன்முன் இளைஞர்களை அரசியல் மயப்படுத்த வேண்டும், அரசியல் இலக்கு பற்றி தெளிவுற்ற பின்னர் அந்த நோக்கத்தை அடைவதற்கு ஆயுதம் அவசியமா என்பதை பின்பு யோசித்து முடிவெடுக்க வேண்டும், எனினும் இவ்வியக்கங்களிலுள்ள இளைஞர்கள் இஸ்லாத்தின் அடிப்படையில் அரசியல் மயப்படுத்தப்படவில்லை. முதலில் இவர்களை இஸ்லாம் மயப்படுத்தப்படவேண்டும். தீவிரவாதிகள் என்றுஇவர்களை கூறுவதற்கில்லை' எனினும் யுத்தப்பயிற்சி என்பது இஸ்லாத்தின் ஒருபகுதியாகும் எனவே முதலில் இஸ்லாத்தில் பூரணமாய் நுழைந்தோரே யுத்தப்பயிற்சி பெறுதல் வேண்டும் என்பதே காங்கிரஸின் கருத்து அதுமட்டுமன்றி ஆயுதத்தால் சமூகம் தாக்கப்படும்போது ஆயுதங்களாலேயே எம்மை நாம் பாதுகாக்கவும் வேண்டும் என்பதில் நம்பிக்கைவைத்துள்ளோம்.

● நா; நன்றி! அஸ்ஸலாஅமுலைக்கும்

★ அ: வஅலைக்கும் ஸலாம், அல்ஹம்துலில்லாஹ் யார் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் சட்டத்தரணி ஜனுப் எம். எச், அஷ்ரஃ

## சோலை......

## கொஞ்சம் உறங்கட்டுமே

துப்பாக்சி வீணையை
இசைப்பவர்களே!
உங்கள்
இரைச்சலைச் சற்று
நிறுத்துங்கள்!
மனித உயிர்களை
உசிப்பிப்பார்க்கும்
உங்கள் கரங்கள்
கொஞ்சம்
உறங்கிக் கொள்ளட்டும்!
மண்ணறைகள் மாறி
மனிதாபிமானம் தழைக்கட்டும்

● எஸ். அலவி ஷரீப்தீன்

## வீட்டோ!

வளர்முக நாடுகளின்
உரிமைக் குரல்வளைகளைக்
குத்திக்கிழிக்க
வல்லரசுகள் பயன் படுத்தும்
கத்தி!

● கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

## விலகினுர்!

சாய்ந்தமருதில் இயங்கும் 'மஜ்லிசு உலமாஇ சுன்னத்தி வல் ஜமாஅத்தி' எனும் உலமா சபையின் தலைவர் பதவியிலிருந்து தாமாகவேவிலகிக்கொண்டேன் என்பதை பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அல்-ஹாஜ் மௌலவி ஐ. எல்
முகம்மது மூத்து (பஹ்ஜி)

பின் பேச்சைக்கேட்கவும். செயலைநோக்கவும் இப்போது ஒரு புதிய தலைமுறை தயாராகிவிட்டது மக்களின் செவிகளை அவர் தன் பக்கம் ஈத்துவைத்திருக்கிருர். ஆத்மீகபலம் அவருக்கு 'பைஆத்'' செய்துவிட்டது அரசியல் வாதிகளின் கவணம் அவர்மீது பலவந்தமாக்கப்பட்டு விட்டது ஆம்! ஸ்ரீ லங்காமுஸ்லிம் காங்கிரஸ் புதிய உத்வேகத்துடன் எழுந்துவருகிறது... அல்ஹம்துலில்லாஹ். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பும் இலக்கும்

பதிலளிப்பவர் : '' மருதூர் மெய்யொளி ''

★ அ: ஒரு முஸ்லிம் ஆண் அந்நியமதப் பெண்ணைத் திருமணம் செய்து. கூடி வாழ்வது இஸ்லாத்திற்கு ஏற்புடையதா?

இல: இஸ்லாத்தில் இத்திருமணம் செல்லாது. ஆதலால் இவர்கள் தாம் பத்திய உறவுகொள்வது விபச்சாரத்திற்கு ஒப்பானதாகும்.

● என். எச். றபியுதீன், ஏறுவூர்

★ அ: ஒரு முஸ்லிம் தன் கடைசி நேரத்தில் வைத்தியரின் ஆலோசனைப் படி மதுபானத்தை மருந்தாக அருந்தலாமா?

இல: '' ஹராமான வஸ்துவில் நோய்களுக்கு நிவாரணி இல்லை '' என்னும் கருத்துப்பட நபி மொழியுண்டு.

● பாயிஸா ஜுனைட் சீனங்கோட்டை

★ அ: எமது சகோதரர்களில் சிலர் பெருநாள் தினங்களின் போதும், தமது திருமணங்களின் போதும் தாய் தந்தையர்களின் கால்களைத்தொட்டு ஸலாம் சொல்லுகின்றனர். இவ்வாறு செய்வதால் 'ஷிர்க்' உண்டாகுமா?

இல: இச்செயல் ஷிர்க்காக அமையாது, ஷிர்க் என்பது அல்லாஹ் அல்லாத ஒன்றை அவனிற்கு இணைவைப்பதாகும். ஆனல், நின்ற நிலையில் குனிந்து கால்களைத் தொட்டு ஸலாம் கூறுவது பரவாயில்லை அது சுஜூது செய்வதுபோல் அமைந்துவிடக் கூடாது.

● எம். ஐ. எம். றிஸ்மி, பஹமுனை.

★ அ: ஆண்களுக்கு நான்கு பெண்களை வழி நடத்த வசதியிருப்பின் அவர்களுக்கு நான்கு திருமணங்கள் முடிக்க இஸ்லாம் அனுமதிக்கிறது அதேவேளை ஒரு பெண்ணுக்கு ஏககாலத்தில் ஒரு திருமணம் மட்டும் தான் முடித்துக்கொள்ள இஸ்லாம் அனுமதியளிக்கிறது இது ஏன்?

இல: பிறக்கும் குழந்தைகளின் தந்தையார் என்பது ஒரு பிரச்சினை ஒரே நேரத்தில் நான்கு கணவனுக்கும் அவள் தேவைப்பட்டால்......... அது மிகப்பெரியபிரச்சினை இப்படியான பல பிரச்சினைகள் உருவாகலாம்.

● ஆர். எம். ரிகாஸ், உடுதெனிய.

★ அ: வுளு இல்லாமல் எந்தெந்தக் குர்ஆன்களைத் தொடக்கூடாது? வுளு இல்லாமல் குர்ஆன் ஓதலாமா?

இல: குர்ஆன் என்று ஒன்றுதான் உண்டு. ஆனல், குர்ஆனிற்குப் பல தப்ஸீர்கள் உண்டு. குர்ஆன் வசனங்களைவிட தப்ஸீர்கள் கூடுதலாக இருப்பதை வுளுவின்றி தொடலாம். இருந்தாலும் வுளு வுடன் தொட்டு ஓதுவது பேணுதலாகும். ஆனல், குர்ஆனை வுளு இல்லாமல் தொடவோ, ஓதவோ கூடாது.

● எம். ரீ. எம். இல்யாஸ், தொட்டவத்தை.

குறிப்பு:- முழுமுகவரியுடன் கீழ்க்காணும் முகவரி ஒட்டப்பட்டுவரும் கேள்விகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். இப்பகுதியில் இஸ்லாம் சம்பந்தமான கேள்விகள் மாத்திரமே இடம்பெறும்.

'' மருதூர் மெய்யொளி ''

ஆசிரியர்
அல் - ஹுதா
'' அம்பும் இலக்கும் பகுதி ''
129, ஒஸ்மன் வீதி
சாய்ந்தமருது : 01.

## அன்பர் அரங்கம்

● செல்வி. ஆயிஷா வாஹிட்
குளியாப்பிட்டிய வீதி,
ஹொரம்பாவை.

● எம். ஐ. அப்துல் ஜப்பார்
48. மெயின் வீதி,
ஏறுவூர் - 03.

● பீ. எம். பஸீர்
இல: 466, செயிலான் வீதி,
கல்முனை.

● எம். ஜே. எம். நவாஸ்
29/5 ஸம்போதி மாவத்தை,
பள்ளிமுல்லை, மாத்தறை,

● முஹமட் பாறூக்
மே / பா, ஜுலால்தீன்
மெயின் வீதி, ஓட்டமாவடி.

● ஏ. எம். தாஹிர்
15, பிரதான வீதி,
ஏறுவூர் - 03,

● ஏ. எம். ஹுஸைன்
24' பிரதான வீதி,
ஏறுவூர் - 03.

● முகமட் பழீல்
மீரானியா ஹோட்டல்,
87, மெயின் வீதி, ஏறுவூர்.

● எம். என். எம். இக்பால்
12, பழைய தங்காலை வீதி,
கொடுவே கொடை, மாத்தறை,

★ இப்பகுதியில் தங்களின் முகவரி வெளிவர விரும்புகிறவர்கள் கீழே உள்ளபடிவத்தை பூர்த்தி செய்து, 75சத முத்திரை இரண்டையும் இணைத்து அனுப்பிவைக்கவும். (ஆ-ர்)

## அன்பர் - அரங்கம்

பெயர்,..........................................

முகவரி..........................................

..........................................

பொழுதுபோக்கு:..........................................

பிறந்த திகதி..........................................

கையொப்பம்; ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் யதார்த்த நிலைப்பாடு

நமது நாட்டைப் பொறுத்தவரை குறிப்பாக வட, கிழக்குப் பிரதேசங்களில் காணப்படும் அரக்கத்தனங்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடு மிகவும் நெருக்கடியானதாகும். யதார்த்தமாகச் சொல்வதென்றால் மத்தளத்தைப் போலிருக்கின்றது. அதாவது இரு பக்கத்தாக்குதல்களை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் இப்புரதேசங்களில் நிகழும் துரதிஷ்டங்களை ஆராய்ந்து வெளிப்படுத்தும் பிரஜைகள் குழு எனும் அமைப்புக்கூட நமக்கென்று தனித்துவமாக இல்லாமையினால்; நாம் இழந்துவிட்ட இழப்பிற்கள ஏராளம் இவற்றுக்கு எடுத்துக்காட்டாக தற்பொழுது நம்மத்தியிலுள்ள ''பிரஜைகள் குழு'' வின் புறக்கணிப்புக்களையே கொள்ளலாம்

சர்வ சாதாரணமாகக் கையைக் கட்டிக் கொண்டு தேசத்தின் சுதந்திர வரலாற்றில் பல உயிர்களை இழந்து சமாதானத்திற்காக நடுத்தெருவில் நாய்களாய் ஊளையிடும் போதும். தான் கீழ் ஜாதியானது என்பதுபோல எமது பிரச்சினைகளை விசாரிக்கவும். அவைகளை அவற்றுக்குப் பொறுப்பானவர்களிடம் சொல்வதற்காவது யாருமற்ற அனாதைகளாக நாம்போனமை தான் என்னவோ எவர்வேண்டுமானாலும், எவைகளையும் செய்யலாம் என்பதுபோல மலிந்து போய்விட்ட துர்பாக்கியங்கள் துயரத்திற்குரியது. எனினும் சிலவேளை சொல்லித் தொலைத்தாலும் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல தொடரும் நிகழ்வுகளை சொல்ல நினைக்கும் மனசுகளைக் கூட சொல்ல முடியாது தடுத்து நிறுத்தும் விரக்திகளையும் உளவியல் ரீதியாகவும் அலட்சியப் படுத்த முடியாது. எனினும் எமது வேதனைகள் சுட்டிக்காட்டப்படாத போதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம், எனவே எமது யதார்த்த பூர்வமான நிலவரத்தை சுட்டிக்காட்டிய பின்பாவது தொலைந்து போவோம் என்ற மனோபாவம் எமக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது பற்றியும் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

# புதைக்கப்படுவதேன் ?

● '' ஹலீவா '

உழைத்துக்கொண்டிருக்கின்ற முஸ்லிம்களின மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகள் பரிதாபத்திற்குரியவை. எனினும் இந் நிகழ்வுகள் பறறி இந் நிகழ்வுகளுக்குப் பொறுப்பானவர்களிடம் சரி தேசிய தினசரிகளிலும் சரி இவைபற்றிய செய்திகளும், அறிக்கைகளும், அவசரத்தந்திகள் போன்ற முறையீடுகளையும் காணமுடியாதமைகள் வேதனைகுரியவை இத்தோடு எமதுஇரத்தக்கறைகளின் வடுக்களை தேசவெளியில் சுட்டிக்காட்ட ஆதாரமற்ற அநாதைகளாகவும் இருக்கின்றோம்.

எமக்கென்ன பிரச்சினை? என்ற கேள்விக்குறிகளுக்கு வாய்க்கால்களையே இன்னுமின்னும் வெட்டிக்கொண்டிருப்பதால்தான்; தேசத்தின் பல சக்திகளும், தேசத்தின் நேச நாடுகளும் நமது பிரச்சினைகளை தொட்டுப் பாராதும்; இச் சந்தர்ப்பங்களை நன்குபயன்படுத்தி நம்மை நசுக்கிக் கொண்டிருக்கின்றனர். இதுபற்றி எம் சிந்தனையின் பக்கம் பதியப்படாமை' பல இழப்புகளை ஏற்படுத்த ஏதுவாக அமைகின்றன. இருந்தாலும். எமது யதார்த்த பூர்வமான நிலவரத்திற்கு எதிர்மாறானகருத்துக்கள் - உதாரணமாக தினசரிகளில் முன்வைக்கப்படுமாயின் உடனடியாக எமது யதார்த்த நிலைமையை சுட்டிக்காட்டுவதற்கான வழியில் நாம் ஈடுபடுதல் வேண்டும்-

பார்ப்பார் குலத்திலும் பறக்குலம் மேற்குலம் அநுகேற்பார் இல்லாமல்

தற்கால துரதிஷ்டமான நிகழ்வுகளில் பாதிக்கப்படுகின்ற அப்பாவி முஸ்லிம் குடும்பங்கள் மட்டும்தான் நமது துயரத்தினையும்' அவற்றுக்கான நிவாரணங்களையும் பெறவேண்டும் என்பதுபோல அனுபவித்துக்கொண்டிருப்பதில் நமது சமூகம் அங்கத்துவம் பெறாத ஒற்றுமையிழப்புகள் பரிதாபத்திற்குரியவை. ஏனெனில் ஒரு தனிமனிதனால் எத்தகையதொரு துர்பாக்கியங்களுக்குநிவாரணம்பெறமுடியாதயதார்த்த நிலையையும் நமது சமூகம் ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டியமையையும் ஒதுக்கிவைக்கமுடியாது, எப்படியிருப்பினும் ஒரு சமூகத்தின் சர்வசாதாரணமானமக்கள் மட்டும்தான் தமதுதுயரத்திற்கு நிவாரணம் பெறவேண்டும் என்பதுபோல் எமது சமூக மத அரசியல் பல்வேறு சமூகசேவை இயக்கச் சேவைகளினதும் முதுகெலும்புகள் முறிந்துபோன பங்களிப்புக்கள் இவ் அவல நிலைமைக்கு ஒரு பிரதான காரணியாகும்,

ஏனெனில் சர்வசாதாரண பிரஜைகளுக்கு இருக்கின்ற தலையீடுகளினதும் பொறுப்புகளினதும். விசாரிப்புகளினதும். சுட்டிக்காட்டுதல்களினதும் உரிமைகளைப் போலவல்ல ஒரு சமூகத்தின் மத, அரசியல். சமூகசேவை இயக்கத் தலைவர்களினது இத்தேசிய உரிமைகள்- என்பவைகளையும் நாம் சிந்திப்பது அவசியமாகும்.

இன்னும் திருந்திக்கொள்ளாத எமது தற்காலம்தான் எமது எதிர்காலத்தையும் ஆட்சி நடத்துவதாக இருப்பின் அவை அறிவுபூர்வமானவொன்றல்ல. ●

# ** சோலை **

## நினைவிருக்கட்டும் ........!

● மருதூர் ஜமால்தீன்

தௌஹீத் பாதையில்
வாழ்வு செலுத்தும்
ஓர்
இனத் தோட்டத்தில்
இழிவுக் கரடிகள்
ஆவேசம்

தேசப் பழங்களை
தேசிய மாக்கி
நிர் மூல மாக்கி......
குழாய் விழிகளால்
அப்பாவி மானுடத்தின்
உயிர்க் குருதிகளை
உறிஞ்சிய தோடு
ஏகனைப்பணி வோரையும்
தட்டிப் பார்க்கின்றன.

உறவு அணிகளை
உருக் குலைய வைத்த
நவீன பருந்துகளே......
உங்கள்
அதிகாரங்களை
அடக்கிவையுங்கள்

சட்டங்களை சதியாக்கும்
பிணந்தின்னிதனை
அரசகட்டிலில்
துயில் கொள்ள
இறுதி மூச்சிலும்
அனுமதியோம்

தற்காலச் சம்பவங்கள்
எங்களுக்கு
பரீட்சையாயினும்
எதிர்காலப் பாடத்தில்
வெற்றியை மீட்டுவோம்!
நினைவிருக்கட்டும்.

## சாதனை காணும் வேதனைகள்

● ஏ. எம். எம். நஸீர்

கன்னத் தாள்கள்
வரைந்திருக்கும்
கவலைக் கோலங்களை
சில நேரம்
கண்ணீர் கழுவிவிடும்

மரண அதிர்ஸ்டங்களை
சொல்லத் தவறியதால்
சாஸ்திரிகளும் -
சகுனம் பார்ப்பவர்களும்
எங்களிடம் பொய்யர்களாகி -
விட்டார்கள்

தேசப் படமாளிகையில்
வருடக் கணக்காக
ஒரு படம் ஓடுகிறது

தீர்வு விருதைக் கொடுக்கத்தான்
எந்த ரஸிகனுக்கும்
இங்கு மனமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை............ (3ம் பக்கத் தொடர்)

இன்றென்ன கருத்துக்களும், பிரச்சினைகளும் முஸ்லிம் சமூகத்தின் முன்னுள்ள பிரச்சினையாக எடுத்துக் காட்டப்படுகின்றன உண்மையில் இதுவரைகாலமும் இப் பிரச்சினை இல்லையா? பேரினவாதிகள் இதுவரை காலமும் முஸ்லிம் சமூகம் வாழ்வதை மறந்து விட்டார்களா? வட - கிழக்கில் மட்டுமா முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்? 1983ம் ஆண்டிற்கு முன்னர் எண்ணிக்கூடப்பார்க்காத பேரினவாதிகளுக்கு தற்போது ஞானம் பிறந்து விட்டதோ? இல்லை இல்லவே யில்லை. முஸ்லிம் சமூகத்திற்கு சில இலக்குகளை முன்வைத்து இன்றைய சூழ்நிலையில் வழிநடாத்திச் செல்லப்பார்க்கும் ஓர் உன்னதமான உபாயமாகும். இக்கருத்துக்களை பேரின வாதக் கட்சிகளில் அங்கம் பெறும் தலைவர்களும், இதற்கு முன்னர் அங்கம் பெற்ற தலைவர்களும் சந்தர்ப்பவாத தலைவர்களும் முஸ்லிம் சமூகத்தின் முன் கொண்டு வந்து விட்டார்கள். எமது தேவைகளை நாமே தீர்மாணிக்கவேண்டும் மற்றவர்களின் ஆற்றுப்படுத்துதலில் எமது சமூகத்துத் தேவைகளை முன் வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, 1983ம் ஆண்டின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்கள் காரணமாக முஸ்லிம் சமூகத்திற்குச் சிலதற்காலிய இலக்குகள் காட்டப்படுகின்றன. இதுவும் பிரித்தாளும் வல்லமையின் ஓர் அம்சமே.

பேரினவாதிகளால் அமுல் நடாத்தப்படும் விடயங்களை தடுத்து நிறுத்தக் கூடிய வல்லமையும். செல்வாக்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் தலைவர்களுக்கு இல்லை எனலாம் முஸ்லிம்களுக்குப் பாதகமான பல சம்பவங்கள் இலங்கையில் ஏற்பட்டு வந்துள்ளன. அவ்வேளைகளில் எல்லாம் பேரினவாத அரசு எடுக்கின்ற தீர்மானத்தின் படி விடயங்கள் நடைபெற்று வந்துள்ளன. “சிறுபான்மையினர் எங்கும் சிறுபான்மையினரே” என்றாலும் கூட தனித்து நின்று தனக்கு இழைக்கப்படும் அநீதிகளை குறிப்பிட்டுக் கூற முஸ்லிம்கள் சக்தியற்று இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

முஸ்லிம் சமூகம் இலங்கையைப் பொறுத்த மட்டில், தலைமையில், கருத்தில், நடைமுறையில் எல்லாம் பேரின வாதிகளின் வழிகாட்டல்களையே நம்பியிருந்து வந்துள்ளது. தனித்துவமான தலைமை தோன்றி விடுவதை சின்னாப்படுத்தி மேலும் பிரிவினைகளை உருவாக்குவதன் மூலம் இலாபம் பெற்று வரும் பேரினவாதிகளின் வலையிலிருந்து விடுபட்டு தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் முஸ்லிம் சமூகம் நிலை நிறுத்தமுன் வரவேண்டும் அப்பொழுது தான் எதிர்கால இலங்கையில் முஸ்லிம் சமூகமும் அரசியல், ஆத்மீகரீதியில் மதிக்கத்தக்கதாக மாறும் அன்றில், சமூக வீழ்ச்சிக்கும், பண்பாட்டு வீழ்ச்சிக்கும், பொருளாதார வீழ்ச்சிக்கும் கூட இது வழிவகுத்து விடும். இன்று நாம் செய்ய வேண்டிய ஒரு பொருத்தமான தலைமையை எமக்குள் தெரிவு செய்து கொள்ள வேண்டும் அது ஆத்மீக, இலௌகீக ஈடேற்றத்திற்கு வழிப்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ●

## தேவை

**அல் - ஹுதா சஞ்சிகைக் குழுவில் அங்கத்துபவர்களும் / செய்தியாளரும் தேவை விபரங்களும், விதியுமடங்கிய விண்ணப்ப படிவத்திற்கு 3.00 ரூபாயுடன் பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.**

மனித வாழ்வில் .......... (4ம் பக்க தொடர்)

பொதிந்து கிடக்கின்ற ஆழமான தத்துவ முத்துக்களையும் இனம் காட்டித் தரும் ஒரு போதகர் - தூதர் கட்டாயமானதென்பதைச் சொல்கிறது. அப்படியானால் குர் ஆனை சதாரணமான ஒருவரால் விளங்கிக் கொள்வது சிரமமான காரியம் இது மனித இயல்பாக இருப்பதனால் தான் மனித குலம் ஆரம்பமான போதிலிருந்தே போதகர்கள் தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றனர் இறுதித் தூதரான எம்பிரான் (ஸல்) அவர்களுக்குப் பின் தூதரில்லை. ஆயினும் மார்க்க அறக்காவலர்களாக மார்க்காறிஞர்கள் திகழ்கின்றனர்.

ஒருமனிதனுக்கென்ன முழு மனிதசமுதாயத்திற்கே நேர் வழிகாட்டக்குர் ஆனும், ஹதீஸும் போதுமானது ஆனால் அவையிரண்டும் கூறும் அறநெறிகளை எல்லோராலும் இனம் காண்பதென்பது இயலாக் காரியமாகும் அது குறிப்பிட்ட தகுதியுடையவர்களுக்குத்தான் முடியும் இதனால், தான் நல்ல விஷயங்களில், அறியாதவர்கள் அறிந்தவர்களைப் பின் தொடர்“தல்” தடுக்கப்பட்டதல்ல. இதற்குச் சான்றாகப் பின் வரும் வசனத்தைக் கொள்ளலாம் “பஸ்அலு அஹ்லத் திக்ரி இன் குன் தும் லாதஃலமூன்” (மக்களே!) நீங்கள் அறியாதவர்களாக இருப்பின் அறிவுடையோர்களிடம் கேளுங்கள். “இவ் வசனத்தைப் படித்ததும் ஒருகேள்வி எழலாம். யார் இந்த அறிவுடையவர்கள்? என்று அதற்கு “குர் ஆனை நன்கு விளங்கிய முஃமின்கள்” என்று தப்ஸீர் காஜின் விளக்கம் தருகிறது.

ஒருவன் தொழுகிறான், நோன்பு நோற்கிறான் ஹஜ்ஜும் (இறைவழியில்) போரும் செய்கிறான் நிச்சயமாக அவன் முனாபிக் காகஇருக்கின்றான் என்று நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் எங்ஙனம் அவனில் முனாபிக்குத் தனம் புகுந்தது என ஸஹாபாக்கள் விசாரித்தார்கள் அவன் தனது இமாமைகுறை படுத்தினதால் என்று வள்ளல் நபி (ஸல்) அவர்கள் விடைபகர்ந்தார்கள் அவனது இமாம் யார் என்றபோது அல்லாஹ்வின் திருமறையிலிருந்து, பஸ் அலூ அஹ்லத் திக்ரி இன்குன்தும்...என்று சொல்லியிருக்கிறான் என பதிலிருத்தார்கள்':

**(அறிவிப்பாளர் அனஸ் (ரலி) தப்ஸீர் துர்ருல் மன்ஸூர்.)**

எனவே அறிவுடையோர்கள் என்பது குர் ஆனை நன்கு துருவி ஆராய்ந்து, அதிலுள்ள விளக்கங்களை மிகத் தெளிவாகத் தெரிந்து தெளிவூட்டக் கூடிய இமாம்கள் தான் என்பதில் இன்னுமென்ன சந்தேகம்? நாம் நம்மையைவைத்துக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம் ஒரு பாமரன் தொழுகையைப் பற்றிய பூரணமான விளக்கங்களை விளங்கிக் கொள்ளுவதானால், குர் ஆனிலுள்ள தொழுகையைப்பற்றி அத்தனை ஆயத்துக்களையும், ஹதீதுகளையும் தேடிப்படிக்க வேண்டும் இது எம்மால் இயலாதவை. எனவேதான் தகுதியுள்ளவர்கள் இவைகளைத்தேடி ஆராய்ந்து தொகுத்துத் தந்துள்ளனர். இந்தத் தொகுப்பை வைத்துப் பேணிக் கொள்வது இலகுவானதாகும். இப்படியான இலகுகளையே நமக்கு இமாம்கள் செய்துள்ளனர்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட நான்கு மத்ஹபுகளுமே ஏற்புடையதாகும் இதன் பின்னர் தோன்றியவற்றை ஆராய்ந்து பார்ப்போமானால், மனித வாழ்வை குழப்பி பித்னாக்களை வளர்த்தெடுக்க முற்பட்டுள்ளதை அவதானிக்க முடியும். ஆனால் இவைநான்கும் மனித வாழ்வில் நேர் வழியையும் ஈருலகவாழ்விலும் ஈடேற்றம் பெறவழிகாட்டுவதுடன்; குர் ஆன் ஹதீஸிற்கு முரண் படாத வகையில் அதன் பங்களிப்புக்கள் நமக்காக செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மதச் சுதந்திரத்திற்குள் இஸ்லாம் புதைக்கப்பட்டுள்ளதா?

எம். எம். எம். நூறுல்ஹக்

இலங்கையைப் பொறுத்தவரை மதச் சுதந்திரம் தாராளமாகத் தரப்பட்டிருக்கிறதென்பதை ஒவ்வொரு சமூகத்தினதும் மதங்களைப் பின்பற்றி வாழ்வதற்கு அரசொரு தடையல்ல என்பதும் சமயக் கலாச்சார அமைச்சுக்கள் நிறுவப்பட்டிருப்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தெனலாம். இலங்கையில் பல இன மக்கள் வாழ்கின்றனர். இவர்களிடையே பல மதங்களும்பேணப்பட்டுவருகின்றன. ஆனால் நம் நாட்டில் பேணப்பட்டுவரும் மதங்களிலிருந்து 'இஸ்லாம்' வேறுபட்டுக் கொள்வதை துல்லியமாகக் காணலாம்

பிறப்பாலோ, கோதிரத்தத்தாலோ நாமத்தாலோ ஒருவன்முஸ்லிமாகிவிட முடியாது. மாறாக '' லா இலாஹா இல் லல்லாஹு முஹம்மதுர் ரஸூல்லாஹி '' என்னும்மூல மந்திரத்தை மனதார ஏற்று. வாயார மொழிவதன் மூலமே 'முஸ்லிம்' ஆக உரிமை பெறுகிறான இவ்வுரிமைக்கு உரிதானவுடன் தன்னிச்சையாகத் தனது சிந்தனைப்படியோ, அல்லது மனித ஆக்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள், கொள்கைகள் போன்றவைகளின் ஆளுமைக்குட்பட்டோ வாழமுடியாத நிலையைப் பெறுகின்றான். தீர்க்கமான வழிகாட்டல்களைக் கொண்ட 'இஸ்லாம்' எனும் முழு மனித வாழ்வுத்திட்டத்தை முழுமையாகப் பின்பற்றி வாழ்வைத் தொடரக் கட்டுப்படுகின்றான்.

இஸ்லாம் என்றால் ஐந்து கடமைகளைக் கொண்டதென நினைத்திருப்போர் பலர். ஆனால் உண்மை நிலை அதுவல்ல மனிதவாழ்வில் தேவையாகின்ற சகல துறைகளுக்கும் விசலாமானதர்கவும். ஈருலக ஈடேற்றத்திற்கு உகந்ததாகவும் தனது அற நெறிகளை நெறிப்படுத்துகிறது இஸ்லாம். இதன் கூட்டுமொத்த வாழ்வின் பிரதான அம்சங்களாக கலிமா, தொழுகை. ஸகாத்நோன்பு, ஹஜ் என்பனவுள்ளன இவ்வற நெறிகளை முன்வைக்கும் அடிப்படை மூலாதாரங்களாக குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ; கியாஸ் என்பனவையுள்ளன.

ஓர் உண்மை முஸ்லிம் இவ்வடிப்படை மூலாதாரங்கள் கூறும் வாழ்வை முழுமையாகப் பின்பற்றி யொழுகக்கடமைப்படுகின்றான். அல்லது கட்டாயப்படுகின்றான். ஆகவே, ஒரு பகுதியை அங்கீகரித்தும் இன்னொருபகுதியை புறக்கணித்தும் வாழும் நிலைப்பாடு இஸ்லாத்தில் இல்லை. இதற்கு மாறாக வாழ்வது 'விசுவாச முஸ்லிம்' என்ற வரம்பிற்குப் புறம்பாக அமைந்து விடுகிறது இவற்றினை எம்மில் பலருணர்ந்து கொள்ளவில்லை. என்பதை பறைசாற்றுவதற்குப் போதுமான சான்றாக நமது இன்றைய நிலையுள்ளது. அதாவது இஸ்லாத்தின் பிரதான கடமைகளும் விவாக சம்பந்தமான குடும்பவியல், ஓரளவு ஒழுக்கவியல் போன்ற அம்சங்கள்தான் நமது நடைமுறைகளாககைக் கொண்டொழுகிறோம்; குற்றங்களும் அதற்கான தண்டனைகளும், பொருளியல் கோட்பாடு பேன்ற பகுதிகளை நாம் பின்பற்றவில்லை. இதற்காக எமது தரப்பில்கூறப்படும்காரணங்கள் இலங்கை ஒரு இஸ்லாமிய நாடு அல்ல. இங்கு இஸ்லாமிய ஆட்சியுமல்ல. ஆகவே இங்கு முழுமையாக இஸ்லாத்தைப் பின்பற்றி வாழமுடியாது, அதிலும் குறிப்பாக குற்றங்களுக்கான தண்டனைகளை நம் நாட்டைப் பொறுத்தவரை அமுல் செய்யமுடியாது. ஏனென்றால் தண்டனைவழங்குவதென்பது தனி மனிதனைச் சார்ந்ததல்ல; அது அரசை சார்ந்ததாகும்' என்பனவையாகும். இவைகள் வெறும் பூச்சாண்டிச் சாட்டுக்கள் என்பதை தெளிவான சிந்தனையுடன் பார்த்தமாத்திரத்தில் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையொரு இஸ்லாமிய நாடில்லாதிருக்கலாம். இஸ்லாமிய ஆட்சியுமில்லாதிருக்கலாம்' ஆனால் இலங்கையில்வாழும் சமூகங்கள் தத்தமது சமயங்களைப் பின்பற்றி வாழ்வதற்கு முழு உரிமையும் இருக்கிறது. ஆகவே நாம் முழுமையாக இஸ்லாமியனாக வாழ்வதற்கு நாடோ சிறுபான்மையாக வாழ்கிறோம் என்பதோ ஒரு தடைக்காரணியாகாது. அதுமாத்திரமன்று ஒரு முஸ்லிமிற்கு முன்மாதிரிகள் அடிப்படைமூலாதாரங்கதான் தவிர அரபுநாடுகளோ முஸ்லிம் நாமங்களைக் கொண்டோர்களோ அல்லஎன்பதைக் குர்ஆன் தெட்டத்தெளிவாகத் தொட்டுக்காட்டுகிறது. '' அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப்பற்றி' கட்டளையிட்டபின்னர், அவ்விஷயத்தில்' (அதற்கு மாறாக) அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. ( குர் ஆன்: 33, 36 ) எனவே, இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கும் அனைத்துவிஷயங்களையும் நடைமுறைப் படுத்துவதன்மூலம்தான் ஈமானுள்ள முஸ்லிமாக இருக்க முடியும். எனவே தான் இந்நாட்டில் எந்தப்பகுதியில் சிதறி வாழ்ந்தாலும்முஸ்லிம்களுக்கென்று ஓர் இறையில்லம் இல்லாமலில்லை. அதனை நிர்வகிக்கவும் ஒரு நிர்வாகசபை இருக்கிறது. இதற்கு கீழ் ஒரு ஜமாத்தாகவே வாழ்கிறோம்இந்தநிலையில்இஸ்லாமியத் தண்டனை முறைமையை நமக்கு பள்ளிப்பரிபாலன சபைமூலம் அமுல் நடத்தலாம். (பள்ளிப்பரிபாலன சபைகள் தகுதியானவர்களால் இடம் கொள்ளப்படும் போததான் இது சாத்தியமாகும்,)

இப்படி நாம் தண்டனையை நிறைவேற்றிக் கொள்வதன்மூலம் ''ஏனைய சமூகங்களுக்கு' எந்தவிதமானபாதிப்புக்களோ, குந்தகமோ விளைவித்துவிடச் சந்தர்ப்பமில்லை. அது மாத்திரமன்றி இலங்கை அரசின் மதச்சுதந்திர அடிப்படைகளுக்கு முரண்பட்டதாகவும் அமையாது. ஏனென்றால் நமது ஒவ்வொருநடவடிக்கைகளும் தனிச் சிந்தனையினாலோ, மனிதச்சட்டங்களாலோ ஆளப்படுவோதல்ல, மாறாக இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைப்பதன் தொழிற்பாடாகவே இருக்கின்றன ஆதலால் சமயத்தைப் பின்பற்றிக் கொள்வதாகவே அமையும். இதனால் இலங்கை அரசின் மதச் சுதந்திர அடிப்படைக்கு முரண்பட்டதாக அமையாதெனலாம். எனவே இலங்கையில் வாழும் ஏறத்தாழ பன்னிரெண்டு இலட்சம் முஸ்லிம்களும் ஓர் அணியில் ஒன்றுபட்டு: ஒருமித்த குரலாக '' இஸ்லாமியத் தண்டனை '' முறையை அமுல் நடத்த முஸ்லிம்களுக்கு வழிவகை செய்யப்படவேண்டும் எனக்கேட்டுப்பெறலாகாதா? (இப்போது நிலவுகின்றபடியான ஷரீஅத் சட்டத்தை நீக்குவதற்கு மட்டும் எதிர்ப்புத் தெரிவித்த முஸ்லிம்கள் தங்களுக்கு முழு ஷரீஅத் சட்டத்தையும் பின்பற்றுவதற்கு இலங்கை அரசியலமைப்பின்கீழ் முழு உரிமையும் உண்டெனக் கோரியிருப்பின் முழு மதச் சுதந்திரத்திற்கான போராட்டமொன்றுக்கு அடித்தளமிட்டிருக்கலாம் இதன்மூலம் இஸ்லாமிய குற்றவியல் தண்டனை அம்சங்கள்கூட வென்றெடுக்கும் வாய்ப்பு எதிர்காலத்தில் கிடைத்திருக்கலாம்) அப்படி நாம் கோரி இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவோமாயின்அதன்சிறப்பைக்கண்டு சிலவேளை இஸ்லாமிய குற்றவியல் சட்டத்தை முழு இலங்கையின் பொதுச் சட்டமாகக் கூட ஆக்குவதுபற்றிச் சிந்திப்பதற்கொருசந்தர்ப்பம் இருக்கிறதல்லவா?

எது எப்படி இருப்பினும், இஸ்லாம்கூறும் அறநெறிகள்யாவும் முழுமையாகப் பின்பற்றல் படவேண்டும் அப்போதுதான் நாம் ''விசுவாச முஸ்லிம்'' என்னும் வரம்பிற்குட்படுவோம் இதுதான் எம்பிறப்பின் இலட்சியத்தையும், நமது வாழ்வின் அர்த்தத்தையும் நிறைவுசெய்யும் சிந்திப்போம் - சீரிய வாழ்விற்கு வழி சமைப்போம்!

பிரதம ஆசிரியர்; ஜனாப் எம். எம், எம். நூறுல்ஹக்.
இணையாசிரியர்கள்; ஜனாப்கள் ஏ. எம். எம். நஸீர், எம். எம். ஜமால்தீன், செல்வி எஸ். யூ. கமர்ஜான்பீபி.
வெளியீடு: இஸ்லாமிய இளைஞர் இலக்கிய வட்டம், அச்சுப்பதிப்பு; மொடேண் பிறின்ரேஸ். கல்முனை,
Al-Hutha • Rcgistered As A Magazine Uuder The Printers and Publishers Ordinance ( CaP: 179 ) By National Archieves Department.
தனிப்பட்ட சுற்றுக்கு மாத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org